**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 19/2024 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | தமிழரசன் |
| Father Name | : | சோமசுந்தரம் |
| Village | : | குழந்தைபாளையம் |
| Taluk | : | புகளூர் (கரூர்) |
| Age | : | 33 |

Accused absent. Crpc 317 petition filed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது குழந்தைபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 12.08.2021 ஆம் தேதியன்று நடந்த PAP வாய்க்கால் பிரச்சனையை பற்றி கேள்விப்பட்டு சம்பவத்திற்கு அடுத்த நாளான 13.08.2021 ஆம் தேதியன்று மாலை 5 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் தங்கவேல் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் மரக்கட்டை மற்றும் வெங்கச்சாங்கல் சம்பவத்தன்று எதிரிகள் பயன்படுத்தியதாகும். அவற்றை என் முன்னிலையில் போலீசார் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்கள். அதில் நானும் என்னுடன் தங்கவேல் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

__குறுக்கு விசாரணை__

அ.சா.1 சிவக்குமார், ராமசாமி ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். எனது ஊர் கரூர் மாவட்டம் குழந்தைபாளையம் என்றால் சரிதான். என்னுடன் கையொப்பம் செய்த தங்கவேல் எனது உறவினர் என்றால் சரிதான். போலீசார் எனக்கு சம்பவ இடத்தை அடையாளம் காட்டினார் என்றால் சரிதான். அவர்கள்தான் கல் மற்றும் கட்டையை காட்டினார்கள். போலீசார் வந்த சமயம் என்னையும், தங்கவேலையும் தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இதேபோல் என்னிடம் காட்டப்படும் சான்றுபொருள் போல் அந்த காட்டில் நிறைய கற்கள் இருந்தன. அதேபோல் அந்த காட்டில் கட்டைகளும் நிறையா இருந்தது. போலீசார் என்னிடம் காட்டி கையொப்பம் செய்ய சொன்னார்கள் என்றால் சரிதான். என்னிடம் கையெழுத்து வாங்கிய போலீசார் பெயர் எனக்கு தெரியாது. அவர் காவல் நிலைய கான்ஸ்டபுள் ஆவார். நான் கையொப்பம் செய்த தாளில் அவர் கையொப்பம் செய்தாரா என எனக்கு தெரியாது. அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்கள் எனது உறவினர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் வெளியூரில் இருந்து வெள்ளகோவில் காவல் நிலையம் வந்து கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், தற்போது வழக்கிற்காக சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.21 17:04:33 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்